<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண் .130/2017** **நாள்.30.06.2023**

2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | தொழில் | |
| த. பெ./க.பெ. | மாணிக்கம் | சாதி | |
| கிராமம் | மேல்களவாய் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 55 |

**<u>வ.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

I. ஐயா துரை மகன் ஏழுமலைக்கு 1985 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி ஏழுமலை திருமணம் ஆவதற்கு முன்பு விஜயலட்சுமி பேரூந்தில் 1984 ல் நடத்துனராக வேலை செய்தார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு ரூ. 5 ஆயிரம் மாதம் சம்பாதிப்பார் என்றால் சரியல்ல. தினமும் ரூ. 40 சம்பளம் கொடுப்பார்கள். ஏழுமலை சம்பாதித்த பணத்தை ஐயா துரையிடம் கொடுப்பார் என்றால் சரிதான். ஏழுமலை கொடுக்கும் பணத்தில் தான் ஐயா துரை குடும்பம் நடத்தினார் என்றால் சரிதான். ஐயா துரை ஆட்களை வைத்துக்கொண்டு கிணறு வெட்டும் வேலை செய்து வந்தார். ஏழுமலை சென்னையில் உள்ள பெண்ணை திருமணம் செய்துகொண்டார். அவர் மாமனார் பெயர் சின்னதம்பி. சின்னதம்பி அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்தார். ஏழுமலைக்கு அவரின் மாமனார், மாமியார் தான் செலவு செய்து திருமணம் நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல. ஏழுமலை யின் மனைவிக்கு சிறிய அளவில் சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள். ஏழுமலைக்கு திருமணமாகி சுமார் 1 வருடம் அவரின் தந்தை ஐயா துரையுடன் ஒன்றாக குடும்பம் நடத்தினார். ஏழுமலைக்கு திருமணமாகி சுமார் 4 வருடம் அவரின் தகப்பனாருடன் ஒன்றாக குடும்பம் நடத்தினார் என்றால் சரியல்ல.

II. 25.04.1986 ல் ஐயா துரை என்பவர் துரைசாமி நயினாரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் கிரைய தொகை ரூ. 10 ஆயிரம் அல்லது 11 ஆயிரம் இருக்கும். ஒரு செண்ட் க்கு எவ்வளவு தொகை கிரையம் பேசினார்கள் என்று தெரியாது. மேற்படி கிரைய பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள்

என்று எனக்கு தெரியாது. மேற்படி கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். ஆனால் படித்து பார்க்கவில்லை. மேற்படி கிரைய பத்திரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் ஐயா துரை மகன் ஏழுமலை கொடுத்த பணத்தில் இருந்து தான் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏழுமலையின் முதல்மகனின் பெயர் கமல் என்கிற கமலகண்ணன். மேற்படி கமலகண்ணன் மேல்களவாய் கிராமத்தில் பிறந்தார் என்றால் சரியல்ல. ஏழுமலையின் மாமனார் சின்னதம்பி அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை செய்து இறந்துவிட்டார். மேற்படி சின்னதம்பி இறந்துவிட்டதால் அவரின் வேலையை தான் ஏழுமலைக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. ஏழுமலைக்கு திருமணமாகி ஒன்றரை வருடத்தில் அவருக்கு வேலை கிடைத்தது. ஏழுமலைக்கு திருமணம் நடந்து 6 மாதம் கழித்து வழக்கு சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

III. ஏழுமலைக்கு திருமணத்தின் போது கொடுத்த நகையை கொண்டு தான் வழக்கு சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஐயா துரையின் மகள் மல்லிகா என்பவரை திருமணம் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி நாராயணன் என்பவர் 2ம் பிரதிவாதி குமாரி என்பவரை திருமணம் செய்துகொண்டுள்ளார். திருமணத்தின் போது சீர்வரிசை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சீர்வரிசை எதுவும் செய்யவில்லை என்றாலம் வழக்கிற்காக சீர்வரிசை செய்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஏழுமலை 04.06.2017 அன்று இறந்துவிட்டார். ஏழுமலை மனைவி பெயர் குப்பம்மாள். ஏழுமலையின் மகன் பெயர் கமல் என்கிற கமலக்கண்ணன், மகள் பெயர் லதா , மகேஸ்வரி. ஏழுமலை இறந்த பிறகு அவரின் மனைவி , மகன், மகள் கிராமத்தில் உள்ள வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொதுவாக தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஏழுமலையின் வாரிசுகள் ஐயா துரையிடம் சொத்தை பிரித்து தருமாறு கேட்டார்கள் என்றால் சரியல்ல.

IV ஐயா துரை கடன் வாங்கிய விவரங்கள் எனக்கு தெரியாது. ஐயா துரை சொத்தை பிரித்து தராததால் ஏழுமலையின் வாரிசுகள் OS. 429/2017 என்ற வழக்கை ஐயா துரை, மல்லிகா, குமாரி, மற்றும் எனக்கு எதிராக 31.08.2017 அன்று செஞ்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆட்சேபனை செய்துள்ளேன். மேற்படி வழக்கு வழக்கில் இருந்து அழைப்பாணை வந்த உடன் இவ்வழக்கை தாக்கல்செய்தேன். நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் ஓ.எஸ் 429/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால்

இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி 429/2017 வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. ஐயா துரை 10.08.2015 ல் ரூ. 50 ஆயிரம் , 09.09.2015 ல் ரூ. 50 ஆயிரம், 15.09.2015 ல் ரூ. 50 ஆயிரமும், 20.10.2015 ல் ரூ. 50 ஆயிரமும் பாண்டின் பேரில் 1ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை கொடுக்கவில்லை என்பதற்காக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐயா துரை 4 தவணைகளாக 2ம் பிரதிவாதியிடம் ரூ. 2 லட்சம் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை திருப்பி தராததால் 2ம் பிரதிவாதி ஐயாதுரைக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் விசாரணை நிலுவையில் உள்ளது. ஐயா துரை 3ம் பிரதிவாதியிடம் ரூ. 50 ஆயிரம் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக வழக்கு தாக்கல்செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கடன்களை ஏமாற்றுவதற்காக நானும், ஐயா துரையும் போலியாக கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொண்டு அதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

V. வழக்கு சொத்தை ஐயா துரையிடம் இருந்து மொத்தமாக ரூ. 1,60,000/- கிரயம் பேசி கிரையம் வாங்கினோம். கிரையம் எப்பொழுது பேசினோம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிரையம் பேசும் போது ஐயா துரையின் தம்பி இருந்தார். சின்னதம்பி கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போடவில்லை. 2 வார இடைவேளில் இரண்டு முறை கிரையம் பெற்றேன். கிரைய வாசகங்கள் பத்திரம் எழுதுபவர் சொன்னார். வா.சா.ஆ. 4 கிரைய ஆவணத்தில்உள்ள வாசகங்கள் கிரைய வாசகங்கள் இல்லை என்றாலும், தான பத்திரம் எழுதும் போது குறிப்பிடும் வாசகங்கள் என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தில் உள்ள வாசகங்களை ஐயா துரை சொன்னார். நான் பெற்ற கிரைய பத்திரங்கள் செல்லாது என்றாலும் , பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ஐயா துரை பெற்ற கிரைய பத்திரத்தின் அசலை நான் பார்த்தேன். மேற்படி அசல் பத்திரத்தை பார்க்கவில்லை என்றாலும், அசல்பத்திரம் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. அசல் பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரைய பெற்ற சொத்து ஐயா துரையின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும் கூட்டு குடும்ப சொத்து என்றால் சரியல்ல. ஏழுமலையின் வாரிசகள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றாலும், அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஐயா துரை கிரையம் வாங்கும் போது அதில் கிணறு இல்லாமல் தான் வாங்கினார். ஏழுமலை கொடுத்த பணத்தை கொண்டு தான் ஐயா துரை கிணறு வெட்டினார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் சரியில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை மறைத்து

இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

–